(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 14(2).] **பாராளுமன்றம்**

## 14 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 மே 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 யூன் 09, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.05.19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(974 ஆம் இலக்க மது அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2012,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் 2014.10.23 ஆம் திகதி சமர்ப்பிக் கப்பட்டதும் 2012.12.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.11.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2012,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2014.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.11.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.10.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2015 யூன் 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4981/ '14

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மினுவங்கொடை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட வெஹிகல்ஸ் லங்கா தனியார் கம்பனி முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் உரிமையாளர்/உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iv) கம்பனியைப் பதிவு செய்யும்போது மேற்படி தொழில்முயற்சியின் இயல்பு காட்டப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5131/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 தயட்ட கிருள கண்காட்சிக்கு சமாந்தரமாக அமுலாக்கப்பட்ட சிறிய குளங்களைப் புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குருநாகல் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த, வெல்லவ, தல்விட்ட குளத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தல் தொடர்பான பெயர்ப்பலகை அந்த குளத்தின் அருகில் தாபிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அதன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இதற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iv) மேற்படி குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5358/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— எரிசக்தி, மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 யூன் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட மத்தளை விமான நிலையத்தினதும் மாகம்புர துறைமுகத்தினதும் எண்ணைக் களஞ்சியத் தொகுதியை திறந்து வைக்கும் வைபவத்திற்காக,

(i) செலவிடப்பட்ட மொத்தச் செலவு;

(ii) ஒலிபெருக்கிக் கருவிகளை பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை;

(iii) இடம்பெயர் மலசலகூட வசதிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை;

(iv) பயன்படுத்தப்பட்ட இடம்பெயர் மலசலகூடங்களுக்கு நீர் வழங்குவதற்காக செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை;

(v) மேற்கொள்ளப்பட்ட உபசரிப்புக்களுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை;

(vi) கட்புல – செவிப்புல உபகரணத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வைபவத்திற்காக,

(i) ஒலிபெருக்கிக் கருவிகளை வழங்கிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) இடம்பெயர் மலசலகூட வசதிகளை வழங்கிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாது என்பதையும்;

(iii) உபசரிப்பு நடவடிக்கைகளுக்கான வழங்கல்களை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5917/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது தபால் மூல வாக்கெடுப்பு நடைபெற்ற 2014.12.23 ஆம் திகதி கோமரங்கடவல பிரதேச செயலகத்தினுள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியரொருவர் அரசியல்வாதியொருவராலும் அவரது பாதுகாவலர்களாலும் தாக்கப்பட்டார் என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல் காரணமாக தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதையும்

அவர் அறிவாரா என்பதையும்

(ஆ) (i) கோமரங்கடவல பிரதேச சபையின் உறுப்பினரொருவருமான சந்துன் ஹேமந்த என்ற மேற்படி ஊழியர் மீது அரசியல் காரணமாக மேற்கொள்ளப்பட்ட மேற்படி தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6015/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் மாத்தறை மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள லொத்தர் விற்பனை முகவர்களின் எண்ணிக்கை மற்றும் விற்பனை உதவியாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) ஒரு லொத்தரை விற்பனை செய்யும் போது லொத்தர் விற்பனை உதவியாளர் ஒருவருக்கு செலுத்தப்படுகின்ற பணத்தொகை எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) லொத்தர் விற்பனை உதவியாளருக்கு ஆயுட்காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அவ்வாறான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) லொத்தர் விற்பனைக்கு கணிசமானளவு சேவையாற்றுகின்ற விற்பனை உதவியாளார்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றல் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6047/ '15

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பலவற்றினை ஆராய்வதற்கு காலஞ்சென்ற நீதியரசர் திரு. உதலாகம அவர்களின் கீழ் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) குறிப்பிட்ட அறிக்கை ஏன் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) அறிக்கையின் உள்ளடக்கத்தினை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) தேவையெனின், மேற்குறிப்பிட்ட ஆணைக்குழு கண்டறிந்தவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6056/ '15

கௌரவ எரிக் பிரசன்ன வீரவத்தன,— உள்ளக போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த சனவரி 8 ஆம் திகதியின் பின்னர் உருவாகிய புதிய அரசாங்கத்தின் கீழ் உள்ளக போக்குவரத்து அமைச்சில் பாரிய அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தேவையான தகைமைகளின் அப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த ஜீ. பிரியதர்ஷன, பிரதான முகாமையாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மத்திய அலுவலகம், கண்டி, பீ.ஏ. வீரகோன், பிரதான பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் , தலைமை அலுவலகம், மஹய்யாவை, அஸங்க தெல்லங்க, டிப்போ முகாமையாளர், கண்டி தெற்கு டிப்போ, எல்.பீ. உடவெல, டிப்போ முகாமையாளர், உடுதும்பர டிப்போ, ஏ.என். சேனாநாயக்க, டிப்போ முகாமையாளர், கண்டி வடக்கு டிப்போ, எச்.பீ. அமரகோன், மாவட்ட செயலாளர், கண்டி வடக்கு டிப்போ மற்றும் கே.எல். கருணாரத்ன, செயற்பாட்டு முகாமையாளர், கண்டி வடக்கு டிப்போ ஆகிய உத்தியோகத்தர்களை அகற்றிவிட்டு இவர்களது பதவிகளில் பதிற்கடமை புரிவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படாமல் ஆட்சேர்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் மற்றும் இவர்களின் தகைமைகள் வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6061/ '15

கௌரவ டக்ளஸ் தேவாநந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள யாழ்ப்பாணம் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் நீர் தாங்கிகளில் நஞ்சு கலந்துள்ளது என்பதை அறிவாரா?

(ஆ) (i) அந்த பாடசாலையின் நீர்த்தாங்கிகளில் நஞ்சு கலந்துள்ளமை தொடர்பாக ஆராய்வதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சம்பளம் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அதனுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6069/ '15

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் நாயகம் யார் என்பதையும்;

(ii) மேற்படி நபர் வேறொரு நிறுவனத்திலும் நிரந்தர பதவியொன்றை வகிக்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி இரண்டாவது பதவியை தாபனக் கோவையின் XXX ஆம் அத்தியாயம் மற்றும் அதற்கேற்புடைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றி பெற்றுக் கொண்டுள்ளாரா என்பதையும்;

(iv) இதற்கு முன்னர் மேற்படி நபர் வேறு அரசாங்க நிறுவனங்களில் ஆலோசகர் அல்லது வேறேதேனும் பதவியை வகித்துள்ளாரா என்பதையும்;

(v) ஆமெனில், வகித்துள்ள குறித்த பதவிகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நபர் தாபனக் கோவையின் XII – XXX ஆம் அத்தியாயங்கள் மற்றும் அதற்கேற்புடைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி அப் பதவிகளைப் பெற்றுள்ளாரா என்பதையும்;

(vii) மேற்படி பதவிகளுக்கு சம்பளம், கொடுப்பனவுகள் அல்லது வேறு சிறப்புரிமைகளைப் பெற்றுள்ளாரா என்பதையும்;

(viii) மேற்படி சம்பளம், கொடுப்பனவுகள் அல்லது வேறு சலுகைகளைப் பெற்றுக் கொண்ட ஆண்டுகள் மற்றும் மாதங்கள் யாவை என்பதையும்;

(ix) மேற்படி நபரின் சம்பளங்கள் பற்றிய விபரங்களை மாதாந்த அல்லது வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(x) மேற்படி நபர் வேறு அரச நிறுவனங்களிலிருந்து வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் அல்லது வேறு சிறப்புரிமைகளைப் பெற்றுள்ளாரா என்பதையும்;

(xi) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(xii) தாபன விதிக் கோவையின் எந்தப் பிரிவின் கீழ் மேற்படி சிறப்புரிமைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6071/'15

கௌரவ மொஹான் பியதர்ஷன த சில்வா,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தனது சட்ட ஆலோசகர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா;

(ii) ஆமெனில், குறித்த உத்தியோகத்தர்கள் யார்;

(iii) இவர்கள் ஆலோசகர்களாக பணியாற்றிய கால கட்டங்கள் யாவை;

(iv) இவ்வாறு சட்ட ஆலோசகர்களாக பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் சட்ட மாஅதிபர் திணைக்களத்திலிருந்து சம்பளம் பெற்றுள்ளார்களா;

(ii) தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேற்படி சட்ட ஆலோசகர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகைக்கு மேலதிகமாக, சட்ட ஆலோசனை வழங்கியமைக்காக பிறிதொரு பணத்தொகை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டுள்ளதா;

(iii) அப்பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6072/ ’15

கௌரவ ரீ.பி. ஏக்கநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாடு பூராவும் அமைந்துள்ள கிராமிய பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவுகளை செயற்படுத்த எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6090/ ‘15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் பங்குகளை மாற்றுகின்ற, கையளிக்கின்ற அல்லது வழங்குகின்ற செயற்பாட்டுடன் தொடர்புடைய சந்தைப் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) அதற்கமைய, அறவிடப்பட்ட மொத்த முத்திரைக் கட்டணம் எவ்வளவு என்பதையும்,

(iii) முத்திரைக் கட்டணம் அறவிடப்படுகின்ற அடிப்படை அல்லது தகவுத்திறன்கள் யாவை என்பதையும்,

(iv) மேற்படி செயற்பாட்டுக்காக அல்லது மேற்படி செயற்பாட்டின் காரணமாக சேர்க்கப்படுகின்ற பெறுமதி மீது வேறு ஏதேனும் வரி அல்லது வரிகள் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், 2014 ஆம் ஆண்டில் அவ்வாறு அறவிடப்பட்ட வரிப்பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4983/ ' 14

கௌரவ புத்திக பதிரண,— உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இணைச் சுகாதார பட்டப் பாடநெறிக்கு ஏற்புடையதாக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. சரத் நந்த சில்வா உள்ளிட்ட மூன்று பேர்களைக் கொண்ட நீதிபதிகள் குழாத்தினால் 2009.06.01 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் படி, முதலாவது மூன்று குழுக்களின் பின்னர் எதிர்வரும் வருடத்திற்காக பேராதனை இணைச் சுகாதார பீடத்திற்கு குழுக்களை இணைத்துக்கொள்வதானது அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் உள்ளிட்ட ஏற்புடைய சகல தரப்புகளுடனும் கலந்துரையாடியதன் பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வழக்குத் தீர்ப்பின்போது ஏற்புடைய அனைத்துத் தரப்புகளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரப்புகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி தரப்புகளுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி கலந்துரையாடல்களின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5987/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தில் அகழ்ந்தெடுக்கப்படும் மணலை சந்தைப்படுத்துவதற்காக கொழும்புக்கு கொண்டுவருதல் பிரச்சினையாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கந்தளாயில் இருந்து கொழும்புக்கு மணலை ஏற்றிவருவதற்குள்ள வசதியானதும் மற்றும் பிரதான வீதியுமான திருகோணமலை – கொழும்பு வீதியின் ஹபரண பிரதேசம் பொலன்னறுவை மாவட்டத்திற்கு உரித்தாயுள்ளமை மணல் ஏற்றிச்செல்வதற்கான உரிமப்பத்திரங்களை வழங்குவதில் பிரச்சினையாக அமைவதற்கு காரணமாயுள்ளது எவ்வாறு என்பதையும்;

(ii) மேற்படி நிலைமையின்கீழ் கந்தளாய் பிரதேசத்திலிருந்து பெறப்படுகின்ற மணல் அநுராதபுரம் ஊடாக கொழும்புக்கு கொண்டுவரப்படுவதால் இடம்பெறுகின்ற மணல் விலையேற்றத்தை தடுப்பதற்கேதுவாக மணல் ஏற்றிச்செல்வதற்கான உரிமப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் வழங்கப்படுகின்ற நிவாரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6073/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் யாப்பகுவ தொகுதியில் 08 மின்சாரத் திட்டங்களினதும் 290 குறுந்தூர மின்சார நீடிப்புகளினதும் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள போதிலும் இவற்றிற்கு மின்னூட்டும் நடவடிக்கைகள் இற்றைவரை தாமதப்படுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களுக்கான மின்னூட்டலுக்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2015 யூன் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4984/ '14

கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மீன்பிடி வளத்தை வெளிநாட்டுக் கம்பனிகள் பெற்றுக் கொள்வதென்பதையும்;

(ii) வெளிநாட்டவர்கள் இலங்கையின் கடற்பிராந்தியத்தை தமது படகுகளுக்கான இறங்குதுறையாகப் பயன்படுத்துகின்றதென்பதையும்;

(iii) இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்யப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(iv) குளிரூட்டப்பட்ட மீன்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(v) மேலே (i) தொடக்கம் (iv) வரையில் குறிப்பிடப்பட்ட காரணங்கள் இலங்கையின் கடற்றொழில் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) தொடக்கம் (அ) (iv) வரை குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5248/ ' 14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் டி. பீ. வெலகெதர மத்திய மகா வித்தியாலயத்தில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆய்வுகூடத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி ஆய்வுகூடம் திறந்துவைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி வித்தியாலயம் இரண்டாம்நிலை பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5988/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் கணக்காளர் ஒருவரான திரு.ஆர்.கே. சமந்த லால் மற்றும் ஆளணி முகாமையாளர் திரு. எதிரிசிங்ஹ ஆகியோர் கடமையை முடித்துவிட்டு சென்று கொண்டிருக்கையில் அதே நிறுவனத்தின் ஊழியரொருவரின் தூண்டுதலின் மீது 2015.02.25 ஆம் திகதி தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தாக்குதல் சம்பவத்தை வழிப்படுத்திய மீன்பிடிக் கூட்டுத்தாபன ஊழியர் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர் யார் என்பதையும்;

(ii) இவருக்கு எதிராக நிறுவன மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

(v) தாக்குதல் சம்பவத்தை வழிப்படுத்தியதாக இனங்காணப்பட்டுள்ள நபருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லையா என்தையும்

(vi) மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

6017/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.12.24 ஆம் திகதி கம்புறுப்பிட்டி, நாரந்தெனிய தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்று நடாத்தப்பட்டதா என்பதையும்;

(ii) அதற்குப் பாடசாலை அதிபரின் அல்லது தேசிய பாடசாலைகள் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட திகதியில் நடாத்தப்பட்ட சனாதிபதி வேட்பாளரின் பிரச்சாரக் கூட்டத்துக்கென 2014.12.16 ஆம் திகதி மேற்படி பாடசாலையின் மதில் இடித்து அகற்றப்பட்டதா என்பதையும்;

(iv) பாடசாலைக் குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் பாடசாலை அதிபரினால் மேற்படி மதிலை இடித்து அகற்ற வேண்டாமென பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மதில் இடித்து அகற்றப்பட்டதன் காரணமாக விளையாட்டு மைதானத்துக்கும், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்கும் பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரசியல் தேவையின் அடிப்படையில் இடித்து அகற்றப்பட்ட மதிலுக்கு ஏற்கப்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி மதில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) இடித்து அகற்றப்பட்ட மதிலை உரிய நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6057/ '15

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— வெளிவிவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய ஜனாதிபதி பதவியேற்றதனைத் தொடர்ந்து மீள அழைக்கப்பட்ட தூதுவர்களினதும் உயர் ஸ்தானிகர்களினதும் எண்ணிக்கையையும்;

(ii) அவர்களை மீள அழைப்பதற்கான காரணத்தையும்;

(iii) மீள அழைக்கப்பட முன் அவர்களின் செயலாற்றல் தொடர்பாக ஏதாவது மதிப்பீடு மேற்கொள்ளபபட்டதா என்பதையும்;

(iv) இவ்வாறு உருவாக்கப்பட்ட வெற்றிடங்களில் 6 மாதங்களுள் எத்தனை நிரப்பப்பட்டது என்பதையும்;

(v) மேற்குறித்த வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள், உயர் கல்வித் தகைமைகள், மூப்புரிமை மற்றும் இலங்கையிலும் வெளிநாட்டுத் தூதரகங்களிலும் சேவைக்காலம் ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட நியமனதாரர்கள் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களா என்பதையும்;

(ii) 2015 சனவரியில் உள்ளவாறாக, இவர்களில் வெளிநாட்டுத் தூதரகங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்களும் இருந்தார்களா என்பதையும்;

(iii) தரம் 1 ஐச் சேர்ந்த அல்லது நியமனப் பட்டியலில் உள்ள எல்லோரையும் விட சேவை மூப்புள்ள ஆனால், பட்டியலில் பெயர் இடம்பெறாத, தூதுவர்களாகவோ அல்லது உயர் ஸ்தானிகர்களாகவோ தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்கள் உள்ளனரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6062/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் மத்திய அமைச்சின் அனுசரணையுடன் வட மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், நிரல் அமைச்சினால் நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கு தொடர்பாகவும் மற்றும்

(ii) அந்த கருத்தரங்கின் நோக்கம், கருத்தரங்கிற்கு ஒதுக்கப்பட்ட பணம் மற்றும் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும்;

அவர்அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6074/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 'தயட்ட கிருள' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த கருத்திட்டங்கள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக தொழில்களை இழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களின் தொழில் இழப்பு சம்பந்தமான பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5757/ '14

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டினுள் அறிக்கையிடப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை, பெண்கள் பாலியல் வல்லுறவு சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சம்பவங்களுக்கு தவறாளிகளாக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அளிக்கப்பட்ட தண்டனைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்கள் பாலியல் வல்லுறவு மற்றும் போதைப்பொருள் தவறுகள் சம்பந்தமாக போதியளவு சட்டங்கள் இந்நாட்டினுள் அமுல்படுத்தப்படுவதில்லையா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

(iv) அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6024/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முன்னாள் பாதுகாப்பு செயலாளர்களில் தற்போது அதிக உயிர் அச்சுறுத்தலுள்ள செயலாளர் யார் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முன்னாள் பாதுகாப்பு செயலாளர் திரு. கோத்தாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து நீங்கியதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது இப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், தற்போதுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நிலவும் உயிர் அச்சுறுத்தலுக்கு ஏற்றவாறு திரு. கோத்தாபய ராஜபக்ஷவுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவரின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

6055/ '15

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இருக்கின்ற வாய்பேச முடியாத செவிப்புலனற்ற மக்கள் தொகை யாதென்பதையும்;

(ii) இவர்களில் அரசாங்க உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) செவிப்புலனற்றோருக்காக அரசாங்கம் வழங்கியுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(iv) செவிப்புலனற்றோருக்கு உதவி வழங்கும் பொருட்டு உள்ள மொழி பெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செவிப்புலனற்ற சமுதாயத்தினருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மாற்றுத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தியேனும் இவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை பரிசோதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்கு முன்னர் செவிப்புலனற்றோர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) செவிப்புலனற்றோருக்கு கல்வி புகட்டுவதற்காக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) செவிப்புலனற்றோருக்குக் கற்பிப்பதற்காக செவிப்புலனற்றோரிலிருந்து தகைமைகளுக்கேற்ப தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6063/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுன்னாகத்தில் இயங்குகின்ற "Northern Power Station" நிறுவனத்திற்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கைக்கமைய மேற்படி நிறுவனத்தினால் இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய மின் வலு அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது "Northern Power Station" நிறுவனம் இயங்குவதில்லை என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவனம் செயலிழந்துள்ள காரணத்தினால் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6075/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரச ஊழியர்கள் எத்தனை பேருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படாத அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) தற்போது அதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6036/ '15

7.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி திருமதி தமாரா குணநாயகம் அவர்கள் 1989 முதல் 1990 வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக இருந்துள்ளார் என்று "சுவர்ணவாஹினி" க்கு அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் கூறியுள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், என்ன சான்றின் அடிப்படையில் குறித்த கூற்று வெளியிடப்பட்டது என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட சான்று முக்கியமான சாட்சியாகக் கருதப்படுமிடத்து திருமதி குணநாயகம் அவர்களை நாடு கடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியிலும் அதை அண்மித்த காலப்பகுதியிலும் திருமதி குணநாயகம் அவர்கள் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக இருந்ததுடன் அப்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தொடர்புபட்டிருந்த "அன்னையர் முன்னணியின்" செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் இருந்தார் என்பதையும் அவர் அறிவாரா?

(இ) திருமதி குணநாயகம் அவர்கள் பயங்கரவாதத்திற்கு அனுதாபம் காட்டுகிறார் என குற்றஞ்சாட்டுவது, அவர் மனித உரிமைகள் தொடர்பான துறையில் செயற்பாட்டாளராக இருந்ததன் காரணத்தினாலா என்பதை அவர் மேலும் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5758/ '14

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தில் பிரித்தானியர்களின் காலம் தொட்டு இருந்துவந்த பாரிய மதிலை உடைத்து பிளாஸ்டிக் காப்பிடப்பட்ட கம்பி வலையொன்றை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது துறைமுகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்பு தனியார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படுவதாயின் அந்நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கம்பனிக்கு இவ்வொப்பந்தம் வழங்கப்படுகின்றபோது கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) இக்கேள்விப்பத்திரத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) இதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த ஏனைய கம்பனிகள் யாவையென்பதையும்;

(vi) இக்கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்புக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரர?

(ஈ) இன்றேல், ஏன்?

6025/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.12.31 ஆம் திகதியளவில் திரு. சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாதுகாவலர்கள் எந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) தற்போது இவருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவரது பாதுகாவலர்களின் எண்ணிக்கையில் திருத்தங்கள் செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) யுத்த காலத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களும் தற்போது ஓய்வுபெற்றுள்ளவர்களுமான கடற்படைத் தளபதி, வான்படைத் தளபதி, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ் மாஅதிபர் ஆகிய பதவிகளை வகித்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.269/'14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற்துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.270/'14

கௌரவ புத்திக பதிரண,— நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்,— இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றாடல் முறைமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுமிக்க சுற்றாடல் முறைமையொன்றாகிய நக்கிள்ஸ் வன ஒதுக்கமானது தற்போது மனித செயற்பாடுகளின் காரணமாக கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, இன்றைய சந்ததியினருக்கும் அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கும் மேற்படி சுற்றாடல் அழிவின் காரணமாக ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை அகற்றி நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தின் சுயாதீனமான இருப்பை துரிதமாக உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.271/'14

கௌரவ புத்திக பதிரண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும், இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.272/'14

கௌரவ புத்திக பதிரண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.273/'14

கௌரவ புத்திக பதிரண,— காலாவதியான ஔடதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்தல்,— தற்போது இலங்கையில் காலாவதியான ஔடதங்கள் சந்தையிலும் அரச வைத்தியசாலைகளிலும் பாவனைக்கு வரும் ஆபத்து காணப்படுவதனால் அரசின் சகல பிரிவினரும் தலையிட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து காலாவதியான ஔடதங்களை சந்தையிலிருந்து அகற்றுவதற்கும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.274/'14

கௌரவ புத்திக பதிரண,— எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்தல்,— இலங்கையில் தற்போது இனம்காணப்படாத அண்ணளவாக 3000 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதால், அவர்களை இனம்கண்டு சிகிச்சையளிப்பதற்கும், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் பயனுறுதியானதும், பொருத்தமானதுமான கருத்திட்டமொன்று துரிதமாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.275/'14

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாடுகளில் பாலியல் துஷ்பிரயோகளுக்கு இலக்காகும் பெண்களுக்கு நிவாரணமளித்தல்,— இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண் சேவைக்கென வெளிநாடு சென்ற பின்னர் நிகழும் பாலியல் துஷ்பிரயோகங்கள் காரணமாக ஏற்படும் கருத்தரிப்புகளால் இலங்கைச் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினை நிலைமைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு கல்விமான்கள் மற்றும் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.276/'14

கௌரவ புத்திக பதிரண,— வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பைத் உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுதல்,— அண்மைக் காலமாக இலங்கையிலுள்ள வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் அழிவு அதிகரித்து வருவதோடு, இலங்கையின் சுற்றாடல் சமநிலைக்கு அதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால், இந்த அழிவை நிறுத்துவதற்காக மக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் அதேபோன்று அமுலிலுள்ள சட்ட ஏற்பாடுகளை முறைசார்ந்ததாக மற்றும் கடுமையானதாக இருக்கக்கூடியவாறு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.277/'14

கௌரவ புத்திக பதிரண,— பல்வேறு சமய குழுக்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகத் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல்,— பிரதானமான போக்கிலுள்ள சமயக் கருத்தியல்களை விமர்சித்துக் கொண்டு, அச் சமயங்களின் உப பிரிவுகளாக தமது வியாக்கியானங்கள் மற்றும் விளக்கங்களை சமூகமயப்படுத்துகின்றதும், புதிய கருத்தியல்களை முன்வைத்து, அக் கருத்தியல்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களை அணிதிரட்டுகின்றதுமான, சமய மற்றும் வேறு தோற்றங்களில் சமூகமயமாகி இருக்கின்ற குழுக்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுடைய கருத்தியல்கள், செயற்பாடுகள் மற்றும் சமூகத்திற்கு அவர்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் எவ்வாறானவை என்பதைப் பற்றிய மதிப்பீடொன்றை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அறிக்கையொன்றைப் பெற்று அதன் விதப்புரைகளை செயற்படுத்துதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.278/'14

கௌரவ புத்திக பதிரண,— உயர் தரத்திலான மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்,— சமையலின் போது எரிவாயு மற்றும் மின்சாரம் விரயமாகாத வகையில் துரிதமாக வெப்பத்தை உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மட்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான முறையில் உணவு சமைக்கக்கூடிய இயலுமை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேணடுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.281/'14

கௌரவ புத்திக பதிரண,— ஆன்மீக உளவியல் துறைக்கு பௌத்த தர்மத்திலிருந்து செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளல்,— உள்ளம் பற்றிய புத்தபிரானின் ஒருசில விளக்கங்கள் நவீன விஞ்ஞானத்தாலும் கண்டறிய இயலாத அளவுக்கு ஆழமானதாக உள்ளதால், அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நிகழ்காலத்தில் ஆன்மீக உளவியல் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தைத் தழுவியதான வரைவிலக்கணங்களையும் தீர்வுகளையும் முன்வைக்கக்கூடிய வகையில், சம்பந்தப்பட்ட துறை பற்றிய பரந்த அறிவுபடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபல்யப்படுத்தவும், இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தவும், ஆன்மீக உளவியல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசாங்கம் இடையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.282/'14

கௌரவ புத்திக பதிரண,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துதல்,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் மேற்படி பாடத்தைச் சேர்த்துக் கொள்வதையும் பல்கலைக்கழகங்களில் தொல்பொருளியல் விடயப்பரப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும், அதன் மூலம் தொல்பொருளியல் விடயத்துறையை நாடெங்கினும் பரப்புவதன் மூலம் உருவாகின்ற கல்விமான்களிடமிருந்து சாதகமான சேவையை பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நீண்டகால ரீதியில் திட்டமிட்டு உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்மென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.285/’14

கௌரவ புத்திக பதிரண,— உணவு வகைகளில் உள்ளடங்கியுள்ள நச்சுத்தன்மையைப் பற்றி ஆராய்வதற்காக விஷேட தரநிர்ணய நிறுவனமொன்றை தாபித்தல்,— கமத்தொழிலின்போது பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் காரணமாக உணவுப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலந்துள்ளதுடன், இது பற்றி கண்டறிவதற்கு ஏற்புடைய தரநிர்ணய நிறுவனமொன்று ஏற்கனவே இலங்கையினுள் நிறுவப்படாமையினால் இவ்விடயத்திற்கென விஷேட தர நிர்ணய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.286/’14

கௌரவ புத்திக பதிரண,— யாசகர்கள் யாசிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்,— இலங்கையில் யாசகர்கள் சிறுவர்களுடன் யாசிப்பதைத் தடை செய்து, யாசிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தத் தேவையான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.306/’15

கௌரவ கீதாஞ்சன குணவர்த்தன,— களனிவெலி புகையிரத பாதையை மேம்படுத்துதல்,— ஒரு நாளைக்கு சுமார் 15 தடவைகள் கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி போக்குவரத்தில் ஈடுபடுகின்றதும், புகையிரத போக்குவரத்துச் சேவையில் இணைந்து சுமார் 100 வருடங்களைக் கடந்துள்ளதுமான களனிவெலி புகையிரதப் பாதையானது, கொழும்பு மாவட்டத்தில் துரிதமாக நகரமயமாக்கலுக்கு உள்ளாகிவரும் மகரகம, ஹோமாகம மற்றும் பாதுக்கை ஆகிய பிரதேசங்களின் ஊடாக அமைந்துள்ளது. ஹைலெவல் பாதையுடன் இணைந்த துணைவீதி முறைமையின் ஊடாக தனியார் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்தும் இப்பிரதேச மக்கள் நாளாந்தம் காலையிலும் மாலையிலும் கடும் போக்குவரத்து நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதால், இதற்கான ஒரு மாற்றீடாக மேற்படி புகையிரதப் பாதையை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்வதற்கான தேவைப்பாடு வெகுவாக உணரப்பட்டுள்ளதால், இப்புகையிரதப் பாதையை நவீன, இலகுவான மற்றும் இலத்திரனியல் புகையிரதப் பாதையாக அமைப்பதற்கு அல்லது எரிபொருள் செலவு மற்றும் காலத்தை குறைக்கும் வகையில், மேலாகச் செல்கின்ற (Monorail) ஒரு புகையிரதப் பாதையாக அமைப்பதற்கு தேவையான திட்டங்களை துரிதமாகத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

# 2015 யூன் 23, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

5759/ ' 14

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ மாகாணத்தில் குரகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குரகல புனிதத் தலத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அகழ்வுகளின் மூலம் கிடைத்த தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குரகல புனிதத் தலத்தின் பௌத்த உரிமையை உறுதிப்படுத்துவத்றகு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வுகளை இடையறாமல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6026/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சனாதிபதி மற்றும் முன்னால் சனாதிபதிகளில் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் ஆகக்கூடிய உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளவர்கள் யாவர் என்பதை புலனாய்வுப் பிரிவுகள் உட்பட வேறு தகவல்கள் மூலமாக இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்கள் யாவரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முன்னாள் சனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஓய்வுபெறும் போது வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது இவரது பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவியிலிருந்து நீங்கிச் செல்லும் போது வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) முன்னாள் சனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பினை குறைத்தல்/ அதிகரித்தல் சம்பந்தமாக பயன்படுத்தப்படும் அளவுகோள் யாதென்பதையும்;

(iv) அது சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்பவர்கள் மற்றும் அதற்கு பொறுப்பானவர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6076/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனையின் கீழ் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூ. 50,000/- தொகையை திருப்பிச் செலுத்துவதென 100 நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வாக்குறுதியின்படி தற்போது அப்பணத்தொகையை திருப்பிச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது அப் பணத்தொகை திருப்பிச் செலுத்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

5760/ ' 14

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைசச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத்தொகை செலவிடப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புத்தாக்குநர்களை ஊக்குவிப்பதற்காக அப்போதிருந்த தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மேற்கொண்ட பணிகள் யாவையென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி புத்தாக்கங்களை சமர்ப்பித்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட அனுசரணைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) அப்பணத்தொகையை செலவிடுவதற்காகவுள்ள திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6027/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான 228 பீ தம்பலகாமம் கிராம சேவையாளர் பிரிவின் முள்ளிப்பொத்தான, பெரக்கும் ப்ளேஸ், 05 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஈ.கே.ஜீ. ஜயதிலக்க குடும்பத்திற்கு ரூபா 2000/- சமுர்த்தி கொடுப்பனவும், அதே பிரிவில் மொல்லிபொத்தான, பெரகும் ப்ளேஸ், 131 ஆம் இலக்கத்தில் வசிக்கும் நான்கு பேரைக் கொண்ட யூ.ஜீ. அனுலாவதி குடும்பத்திற்கு ரூபா 3000/- சமுர்த்தி கொடுப்பனவும் கிடைக்க வேண்டும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டுமெனினும் தற்போது ஈ.கே.ஜீ. ஜயதிலக்க குடும்பத்திற்கு ரூபா 1000/- கொடுப்பனவும் யூ.ஜீ. அனுலாவதி குடும்பத்திற்கு ரூபா 2000/- கொடுப்பனவும் வழங்கப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) கட்டாய சேமிப்புப் பணத்தொகைக்கு புறம்பாக இந்த இரண்டு குடும்பத்திற்கும் உண்மையிலேயே கிடைக்கவேண்டிய சமுர்த்தி கொடுப்பனவை இவர்களுக்கு வழங்குவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு எத்தேதியில் ஆரம்பிக்கப்படுமென்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவிற்கு நிலுவைப் பணத்தொகையும் சேர்க்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6077/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடைக்கால வரவுசெலவு திட்டத்தின் மூலம் 200% ஆல் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு நன்மைகள் பொது மக்களுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நன்மைகளை வழங்குகையில் சமுர்த்தி பயனாளிகளின் பெயர் பட்டியல்கள் திருத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி திருத்தங்கள் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவுப் பத்திரப் பெறுமதிகளுக்கான பயனாளிகளை தெரிவு செய்யும் முறையியல்கள்/ பிரமாணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5761/ '14

கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் வெளிநாடுகளில் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள நாடுகள் மற்றும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மீனவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிறைபிடிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மீனவரினதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் சிறையிலுள்ள காலப்பகுதி யாதென்பதை வெவ்வேறாக அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) சிறைபிடிக்கப்படுகின்ற மீனவர்களை துரிதமாக மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதது ஏனென்பதையும்;

(ii) மீனவர்கள் கடல் எல்லைகளை மீறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை பெற்ற பின்னர் அவர்களது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு உதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6082/ '15

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கால வரையறை யாது என்பதையும்;

(ii) யாப்பகுவ மற்றும் கல்கமுவை தேர்தல் தொகுதிகளுக்கு மகாவலி நீரை வழங்கும் திட்டத்துக்கமைய ஹக்வட்டுனாவ மற்றும் பீல்ல அணை வீதிகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) இதற்காக நிதி ஒதுக்குவாரா என்பதையும்;

(iv) பொல்பித்திகமையில் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசன அலுவலகத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 308/ '15

கௌரவ பந்துல குணவர்தன
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ துலீப் விஜேசேக்கர
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க
கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன
கௌரவ மனுஷ நாணாயக்கார
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ ஜயந்த கெடகொட
கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன
கௌரவ லொஹான் ரத்வத்தே
கௌரவ குமார வெல்கம
கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி
கௌரவ ரொசான் ரணசிங்க
கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ குணரத்ன வீரகோன்
கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்
கௌரவ விமல் வீரவங்ச
கௌரவ உதித் லொக்குபண்டார
கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ
கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா
கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே
கௌரவ ரோஹன திசாநாயக்க
கௌரவ ரோஹித அபேகுணவர்தன
கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா

கௌரவ ஜானக பண்டார
கௌரவ வை.ஜீ. பத்மசிரி
கௌரவ டபிள்யூ. பீ. ஏக்கநாயக்க
கௌரவ ஜகத் பாலசூரிய
கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர
கௌரவ அருந்திக்க பர்னாந்து
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ வீரகுமார திசாநாயக்க
கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம
கௌரவ வி.கே. இந்திக
கௌரவ விஜய தஹநாயக்க
கௌரவ தாராநாத் பஸ்நாயக்க
கௌரவ நிர்மல கொத்தலாவல
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ கனக ஹேரத்
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ சரத் குமார குணரத்ன
கௌரவ ஹேமால் குணசேக்கர
கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்
கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்
கௌரவ லலித் திசாநாயக்க
கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி
கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி
கௌரவ ருவன் ரணதுங்க
கௌரவ திளும் அமுணுகம
கௌரவ நாமல் ராஜபக்ஷ
கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும
கௌரவ மில்ரோய் பர்னாந்து
கௌரவ மொஹான் லால் கிரேரு
கௌரவ சரண குணவர்தன
கௌரவ விக்டர் அந்தனீ
கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன
கௌரவ ஜயசிங்க பண்டார
கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ விஜித பேருகொட

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ பொ. பியசேன

கௌரவ லசந்த அலகியவன்ன,— கௌரவ நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,—

தமிழ் புனர்வாழ்வு அமைப்பிற்கு (TRO ) நடைமுறை நிதி வழங்குநரும், நிதிசார் குற்றங்கள் தொடர்பாக தண்டனை பெற்று தற்போது ஐக்கிய அமெரிக்காவில் சிறையிலிடப்பட்டுள்ளவருமான, திரு. ராஜ் ராஜரத்னத்துடன் செலாவணிக் கொடுக்கல், வாங்கல் தொடர்புகளை வைத்திருந்த கௌரவ ரவி கருணாநாயக்கவுக்கு உயர்மட்ட நம்பிக்கைகக்குரிய கௌரவ பதவியொன்றான நிதி அமைச்சர் பதவியின் பொறுப்பினை ஏற்பதற்கு தார்மீக உரிமையில்லை என்பதாலும், மேலே கூறப்பட்ட கௌரவ ரவீ கருணாநாயக்க,

கடந்த ஆட்சிக் காலத்தின் போது நாட்டின் உற்பத்தி, வருமானம், தொழில் நிலை, விலை மட்டம், சென்மதி நிலுவை, சேமிப்பு மற்றும் முதலீடு போன்ற பேரண்டப் பொருளாதார மாறிகள் மீது பாரிய குந்தகமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒட்டுமொத்த பொருளாதாரமும் முழுமையாகவே நாசமாக்கப்பட்டுள்ளதென உயர் சபையாகிய பாராளுமன்றத்தில் உண்மைக்கு மாறானதும் தீயநோக்குடையுதுமான கூற்றுக்களை முன்வைப்பதன் மூலமாக பாராளுமன்றத்தையும் நாட்டு மக்களையும் தவறாக வழிநடாத்தி தனது குறுகிய அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாலும்,

திரு. ராஜ் ராஜரத்னம் மற்றும் இலங்கையில் முதலீடு செய்வதற்காக ஊக்கப்படுத்திய நெருங்கிய நண்பர்கள் வட்டத்தின் உறுப்பினராகிய சிங்கப்பூர் பிரசையாகிய திரு. அர்ஜுன மகேந்திரவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய திறைசேறி முறிகள் சார்ந்த மோசடி சம்பந்தமாக விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே மத்திய வங்கியின் ஆளுநர் குற்றமற்றவர் எனவும், முறிகளை வழங்கும் செயன்முறை உரிய வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதெனவும் பகிரங்கமாக தெரிவித்ததன் மூலம் நிதிச் சந்தையை தவறான வழியில் இட்டுச்செல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டதாலும்,

மிகவும் நம்பகமான வகையில் சர்வதேச நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ள மத்திய வங்கி அறிக்கைகளையும் புள்ளிவிபரப் பகுப்பாய்வுகளையும் தவறான, ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக நிதி அமைச்சர் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தெரிவித்திருப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கியை அபகீர்த்திக்கு உள்ளாகும் வகையில் செயற்பட்டிருப்பதாலும்,

திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை ரூபா 40,000 கோடியினால் அதிகரிப்பதற்கான பிரேரணையின்போது பாராளுமன்றத்தைத் தவறாக வழிநடாத்துகின்ற தான்தோன்றித்தனமான கூற்றுக்களின் காரணமாக, குறிப்பிட்ட நிதி ஒழுங்குவிதியானது உயர் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதோடு, தமது நிதி ஒழுங்குவிதிகளையேனும் இக் கௌரவ சபையில் நிறைவேற்றிக்கொள்வதற்குப் போதியளவிலான நன்நடத்தையினையும் சகவாழ்வினையும் வெளிப்படுத்துவதற்கு நிதி அமைச்சர் தவறுகின்றமையாலும்,

நிதி அமைச்சரின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் மற்றும் அதிகார வல்லமையை எடுத்துக்காட்டியதன் காரணமாக நிதிச் சந்தை, மூலதனச் சந்தை, கடன் சந்தை, பங்குச் சந்தை மற்றும் முதலீட்டுச் சந்தையில் மதிப்பீடு செய்ய முடியாதளவு இழப்புகள் ஏற்பட்டுள்ளதாலும், மேற்படி சந்தைகளில் உயர் தொழில் சார் துறையினால் மற்றும் பங்கேற்போர் மீது அச்சுறுத்தல் ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக அறிய வந்துள்ளதாலும்;

நாட்டின் வட்டி வீதம், செலாவணி வீதம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு ஆகிய மிக முக்கியமான அனைத்துப் பேரண்டபப் பொருளாதார காரணிகள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்த நிதி அமைச்சரின் செயற்பாடுகள் காரணமாக உள்ளதாலும்;

அரசியல் இலாபங்களை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு குறுகிய கால ரீதியில் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையக்கூடிய, எனினும் நடுத்தர கால மற்றும் நீண்டகால அடிப்படையில் பொதுமக்கள் மீது கடும் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய நிதியியல் நடைமுறைகளைப் பின்பற்ற தவறான ஆலோசனைகளை வழங்கியுள்ளமை மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சித்ததன் மூலம் அரச நிதி முகாமைத்துவப் பொறுப்புகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதனாலும்;

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை சிதைக்கின்ற வகையிலும் தனியார் முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்கின்ற வகையிலும் அரச நிதிக் கொள்கை வழிநடத்தப்படுவதாலும்,

அரச வரி அறவீட்டுக் கோட்பாடுகளுக்கு முரணான வகையில் குரோதமான வரி முறைகள் விதிக்கப்படுவதன் மூலம் அரச நிதி நடவடிக்கைகளின் ஊடாக சில நியாயமான நல்லாட்சி தொழில்முயற்சியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளமையாலும்,

பாதகமான நிதி முகாமைத்துவத்தின் ஒரு நேரடி விளைவாக நிதிச் செலவினம் அதிகரிக்கப்பட்டமையின் மூலம், வரி செலுத்தும் பொதுமக்கள் மீது பல கோடி வரி மற்றும் கடன் பளு சுமத்தப்பட்டமைக்கு மேலதிகமாக, சர்வதேச நிதி மற்றும் மூலதனச் சந்தையின் நம்பிக்கை தகர்க்கப்பட்டமையால் சர்வதேச இறைமை முறிகள் ஆகிய சாதகமான நிதி மூலங்களிலிருந்து அரச நிதி வளங்களை ஈட்டிக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இழக்கச் செய்யப்பட்டுள்ளமையாலும்,

2015 ஆம் ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட அரச நிதி இலக்குகளை அடையத் தவறியமை காரணமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு வளர்ச்சி எய்தப்பட்டமையினால், ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் பாரியதொரு அழுத்தத்துக்கு ஆளாக்கும் பொருளாதார படுகுழியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமையாலும்,

2015 வரவு செலவு திட்ட மதிப்பீட்டு (திருத்த) சட்டமூலத்தில் நெற் செய்கையாளர்களுக்கு, தேயிலை, இறப்பர் உற்பத்தியாளர்களுக்கு, வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையாலும்,

கல்விக்காக அரச வரவு செலவு திட்டத்தில் 6 சதவீதத்தை ஒதுக்குவதாக கூறி, 2015 இல் கல்வி அமைச்சிற்கு ஒதுக்கிய நிதியை பெருமளவில் குறைத்து, ஆயிரம் மஹிந்தோதய இரண்டாம் நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம், தொழில்நுட்ப பாடவிதான உட்கட்டமைப்பு வசதிகள், கல்வியல் கல்லூரிகள் மற்றும் பிரிவெனாக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய கருத்திட்டங்கள் முற்றாக நிறுத்தப்பட்டமையினால் இலங்கையின் இலவச கல்வியின் அழிவுக்கு வழிகோலியுள்ளமையாலும்,

அரசாங்கம் பொருளாதாரத்தினுள் அபிவிருத்திப் பணிகளுக்கு வசதி ஏற்பாட்டாளராக செயற்பட ஊக்கம் கொள்ளாமையினால் இலங்கையின் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான தனியார் துறையினர் கடுமையாக பாதிக்கப்பட்டு அவற்றில் தொழில்புரிந்தவர்கள் தொழிலற்றவர்களின் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையாலும்,

ஆதலால், தேசத்தினதும் தேசிய பொருளாதாரத்தினதும் பொது மக்களினதும் நலனுக்கு ஏற்புடையதாகின்றவாறு, நிதி முகாமைத்துவம் செய்வதற்கு கௌரவ நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு உள்ள ஆற்றல் பற்றிய நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளதென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.